**வாக்குமூலம்**
**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,**
**மேட்டூர்,**
**தேதி: 08.04.2026**
**OS. No. 06/2019**
**வழக்கு சாட்சி PW.1– பூபாலன், த/பெ. குள்ளப்பன்**

(சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து 1, 2, 4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார் )

**1, 2, 4 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1) இந்த வழக்கை நான் ச.எண்.117/4B3B ல் உள்ள சொத்திற்காக தாக்கல் செய்துள்ளேன். பிரதிவாதிகள் என் தந்தைக்கு விற்ற சொத்தில் 2 செண்ட் நிலத்தையும் சேர்த்து பட்டா பெற்றுக்கொண்டார்கள், அதை சரிசெய்து தருமாறு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்துக்கள் எத்தனை அயிட்டங்களாக காண்பித்துள்ளோம் என்றால் ஒரு அயிட்டமாகத்தான் காண்பித்துள்ளேன். இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு முன்பு இந்த வழக்கின் பிரதிவாதிகள் மற்றும் சில நபர்களை சேர்த்து இதே நீதிமன்றத்தில் அ.வ.எண்.183/2001 என்ற வழக்கை தாக்கல் செய்திருந்தேன் என்றால் சரிதான். அந்த வழக்கை ச.எண்.118/2 ல் எங்கள் எல்லைக்குள் பிரதிவாதிகள் வர கூடாது என்று பரிகாரம் கோரி தாக்கல் செய்திருந்தேன்.

2) மேற்படி வழக்கில் ஒரு இடைக்கால தடை உத்தரவு மனு எண்.693/2008 தாக்கல் செய்திருந்தேனா என்றால் ஆமாம். அந்த மனு 07.12.2009 ல் முழு விசாரணைக்கு பிறகு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல, அந்த வழக்கில் சர்வே எண் தவறாக குறிப்பிட்டிருந்ததால் எங்கள் தரப்பிலும், பிரதிவாதிகள் தரப்பிலும் சேர்ந்து வழக்கை வாபஸ் பெற்றுவிட்டோம். மேற்படி வழக்கு குறித்த சங்கதிகள் குறிப்பிட்டு பிரதிவாதிகள் பதிலுரை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான், அதை நான் படித்துள்ளேனா என்றால் படித்துள்ளேன். அந்த பதிலுரையில் மேற்கண்ட இடைமனு எண்.693/2008 ஆனது முழு விசாரணைக்கு பின் தள்ளுபடி செய்யப்பட்டதாக குறிப்பிட்டுள்ளார்கள் என்றால் சரிதான்.

3) அந்த சங்கதிகள் தவறு என்று காட்டுவதற்கு மேற்கண்ட வழக்கின் உத்தரவு நகல்களை இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என் நிரூபண வாக்குமூலத்தில் குறிப்பிட்டுள்ள ஏழு ஆவணங்களை தவிர வேறு எந்த ஆவணமும் நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதில் மேற்கண்ட வழக்கின் உத்தரவு நகல்கள் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேற்படி வழக்கை இடைநிலை மனு தள்ளுபடி செய்யப்பட்ட பிறகு வழக்கில் வெற்றி பெற வாய்ப்பு இல்லை என்பதால் வழக்கை மேல் நடத்தாமல் தள்ளுபடிக்கு விட்டுவிட்டோம் என்றால் சரியல்ல. அதனால் தான் அந்த வழக்கு சங்கதிகளை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

4) இந்த வழக்கின் பிராதினை படித்து பார்த்துதான் கையொப்பம் செய்தேனா என்றால் ஆமாம். இந்த வழக்கில் மேற்படி வழக்கு குறித்து எங்கும் குறிப்பிடவில்லை என்றால் அந்த வழக்கிற்கும், இந்த வழக்கிற்கும் சம்மந்தமில்லை என்றும், அது வேறு சர்வே எண்ணிற்குண்டான வழக்கு என்றும் சொல்லியுள்ளேன். அவ்வாறு நான் பிராதில் எவ்விடத்திலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்லும் சர்வே எண்ணிற்கு இந்த வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.

5) தாவா சொத்துக்களுக்குண்டான மதிப்பை எதன் அடிப்படையில் நிர்ணயம் செய்தோம் என்றால் எனக்கு தெரியவில்லை. எவ்வளவு மதிப்பு காட்டப்பட்டுள்ளது என்று நினைவுள்ளதா என்றால் நினைவில்லை. நீதிமன்ற கட்டணம் எவ்வளவு செலுத்தியுள்ளேன் என்று நினைவுள்ளதா என்றால் நினைவில்லை. நான் தாக்கல் செய்த ஆவணங்களில் வரி செலுத்தியதாக எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் தாவா சொத்து பிரதிவாதிகளின் பட்டாவில் உள்ளதால் நான் வரி செலுத்தவில்லை, ரசீதும் என்னிடம் இல்லை.

6) ச.எண்.118/3 என்பது கிணறு உள்ள நிலம் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி பெரியசாமியின் தந்தை பெயர் பச்சமுத்து கவுண்டர் ஆகும். பச்சமுத்துகவுண்டர் குள்ளப்ப கவுண்டர் என்பவரிடம் ச.எண்.118/3 ல் பாதி நிலத்தை கிரையம் பெற்றுள்ளார்

என்றால் சரிதான், 4–1/2 சென்ட் நிலம் கிரையம் பெற்றுள்ளார். அ.வ.எண்.183/2001 என்ற வழக்கை நான் அனுபவித்து வருவதாக சொல்லும் வண்டிப்பாதை தொடர்பாக தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. மேற்படி வழக்கில் வண்டிப்பாதை குறித்து நீதிமன்ற ஆணையாளர் நியமிக்கப்பட்டு, வண்டிப்பாதையை பார்வையிட்டு, அறிக்கையும் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான், அது தவறாக தாக்கல் செய்துள்ளார்கள். நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு ஆட்சேபனை ஏதேனும் தாக்கல் செய்திருந்தோமா என்றால் என் பழைய வழக்கறிஞர் திரு.இளங்கோ ஆட்சேபனை தாக்கல் செய்யலாம் என்று சொல்லாததால் தாக்கல் செய்யவில்லை. அவர் தற்போது உயிருடன் உள்ளாரா என்றால் இல்லை.

7) நான் திரு. இளங்கோ என்ற வழக்கறிஞரை வைக்கவில்லை என்றும், திரு.மணிச்செட்டியார் என்பவரை தான் வைத்திருந்தேன் என்றும், அவர் தற்போது இறந்துவிட்டதால் தான் அவர் சொல்லவில்லை என்று தெரிவிக்கிறேன் என்றும், இடைநிலை மனுவில் அந்த அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட பிறகு தான் விசாரணை நடத்தப்பட்டு மனு தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. இந்த உண்மைகளை மறைப்பதற்காக தான் இரண்டாவது வழக்கை தக அமைப்பை மாற்றி தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

8) 1996 ம் ஆண்டில் குள்ளப்பகவுண்டர் வாய்மொழியாக பாகம் பிரித்து கொண்டார் என்றும், அதை எனக்கு கொடுத்ததாக நான் சொல்லியுள்ளது பொய் என்றால் சரியல்ல. குள்ளப்பகவுண்டர் 16.11.2016 ல் இறந்துவிட்டார். அவர் அந்த தேதியில் இறந்ததை காண்பிக்க ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 10.09.2014 ல் பிரதிவாதிகள் எங்களுடைய 2 சென்ட் நிலத்தை பிரிக்காமல் பாகபிரிவினை பத்திரம் ஏற்படுத்திக்கொண்டதாக தெரிவித்துள்ளேன்.அந்த பத்திரம் யார் யாருக்கிடையே ஏற்பட்டது, எந்த சொத்து சம்மந்தமாக ஏற்பட்டது என்று தெரிந்துகொண்டேனா என்றால் 1 ம் பிரதிவாதி பெரியசாமிக்கும், அவரது தம்பி பழனிசாமிக்கும் இடையே அவர்களுடைய சொத்து சம்மந்தமாக ஏற்படுத்தப்பட்டது என்று தெரிந்துகொண்டேன்.

9) மேற்படி பாகபிரிவினை பத்திரத்தில் 1ம் பிரதிவாதி பெரியசாமிக்கு என்னென்ன சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் அது குறித்து எனக்கு தெரியவில்லை. அவருடைய தம்பி பழனிசாமிக்கு என்னென்ன சொத்துக்கள் ஒதுக்கப்பட்டது என்றால் அது குறித்தும் எனக்கு தெரியவில்லை. வா.சா.ஆ.4 மற்றும் வா.சா.ஆ.5 பாகபிரிவினை மற்றும் பாகவிடுதலை பத்திரங்கள் யார் யாருக்கிடையில் எந்தெந்த சொத்துக்கள் குறித்து ஏற்படுத்தப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. மேற்கண்ட பத்திரங்கள் குறித்து அது எழுதப்பட்ட தேதியான 10.09.2014 அன்றே தெரியும் என்றால் சரியல்ல, என் தந்தை 2017 ல் இறந்தபிறகு தான் எனக்கு தெரியும்.

10) நான் 2001ல் தான் அ.வ.எண்.183/2001 தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி வழக்கில் மேற்கண்ட பத்திரங்கள் குறித்த சங்கதிகளை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன்.நான் சொல்வது போல் என்னுடைய சொத்தை உட்படுத்தி பிரதிவாதிகள் பத்திரங்கள் ஏற்படுத்திக்கொள்ளவில்லை என்றும், அவர்களது பெயரிலுள்ள சொத்தை பொறுத்து தான் ஆவணங்களின் அடிப்படையில் பத்திரங்கள் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இதே பிரதிவாதிகள் மீது தாவா B செட்டியூல் சொத்தை பொறுத்து தாக்கல் செய்து, அதில் எனக்கு உரிமையில்லை என்று தீர்ப்பான பிறகு மீண்டும் அதே காரணத்திற்கு இந்த வழக்கை தாக்கல் செய்ய எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல.

11) அதே காரணத்தில் இந்த வழக்கை தாக்கல் செய்து, புதிய வழக்குமூலம் உறுவாக்கி இப்போது தான் தெரியும் என்பது போல் இந்த வழக்கை தாக்கல் செய்ய முகாந்திரம் இல்லை என்றால் சரியல்ல. இது முழுக்க முழுக்க நீதிமன்றத்தை ஏமாற்றும் செயல் என்றால் சரியல்ல, என் தந்தை உயிருடன் இருந்தபோது எங்களுடைய 2 செண்ட் நிலத்தை பிரதிவாதிகளிடமிருந்து பெற முயற்சி செய்தார், ஆனால் முடியவில்லை, நானும் இது தொடர்பாக தாசில்தார் அலுவலகத்தில் மனு கொடுத்துள்ளேன், ஆனால் பிரதிவாதிகள் பெயரில் தவறாக பட்டா உள்ளது.

பழைய

12) மேற்கண்ட சங்கதிகளை இந்த வழக்கிலும், இதற்கு முன்பு தாக்கல் செய்த வழக்கிலும் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகளுக்கு எங்கள் நிலத்தில் 2 சென்ட் நிலம் சேர்த்து பட்டா வழங்கியுள்ளதை திருத்தி கொடுக்க கேட்டுதான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த 2 சென்ட் நிலம் யாருடைய சுவாதீனத்தில் உள்ளது என்றால் பிரதிவாதிகளின் சுவாதீனத்தில் உள்ளது. அந்த 2 சென்ட் நிலத்தை மீட்டு கொடுக்க சொல்லியும் கோரியுள்ளேனா என்றால் ஆமாம். அவ்வாறு என் வழக்கில் நான் கேட்கவில்லை என்றும், அவ்வாறு கேட்கவும் காலதாமத சட்டத்தால் எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் எதிர் வழக்குரை தாக்கல் செய்த பிறகு பழைய வழக்கை மீண்டும் எடுத்து நடத்த மனு தாக்கல் செய்தேனா என்றால் இல்லை.

13) மேற்படி பட்டாவில் தவறு உள்ளது குறித்து திருத்தம் செய்யகோரி வருவாய் துறையினரிடம் மேல்முறையீடு தாக்கல் செய்தேனா என்றால் பட்டாவிலும், பாக பிரிவினை பத்திரத்திலும் சேர்த்து தவறு இருந்ததால் நீதிமன்றத்தில் தான் சரிசெய்ய இயலும் என்று வழக்கு தாக்கல் செய்துவிட்டேன். பட்டாமாறுதல் தவறாகி விட்டது என்று சிவில் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்ய இயலாது என்றும், அந்தந்த மன்றங்களில் தான் பரிகாரம் தேடி கொள்ள இயலும் என்றால் சரியல்ல. பாகபிரிவினை பத்திரம் செல்லாது என்று பரிகாரம் கோரியுள்ளேனா என்றால் கோரியுள்ளேன்.

பழைய

14) 2001 ல் கோட்காமல் விட்டுபோன சங்கதியையும், 1997 லேயே தெரியவந்த சங்கதிகள் குறித்தும் 2019 ல் கேள்வி கேட்க இயலாது என்றும், பிரதிவாதிகள் முறையான ஆவணங்களின்படி அனுபவித்து வருவதால், காலம் கடந்து 2019 ல் அ தை குறித்து கேள்வி கேட்க எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் சொத்துக்கள் குறித்து அவர்களிடையே பாகபிரிவினை பத்திரமோ அல்லது வேறு பத்திரங்களோ எழுதி கொள்வது குறித்து கேள்வி கேட்க எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல.பழைய

15) தாவா B செட்டியூல் சொத்துக்கள் பொதுப்பாதைஎன்று காண்பிக்க ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அ.வ.எண்.183/2001 வழக்கில் இந்த வழக்கில் காட்டியுள்ள B செட்டியூல் சொத்தானது தாரல்குட்டை – புக்கம்பட்டி

செல்லும் தார்சாலை வரை செல்லும் பாதை என்றும், அது பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளது என்றும், ஆணையர் அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றும், இது குறித்து இ.ம.எண்.693/2008 ல் தீர்மானிக்கப்பட்டு, இறுதி உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. இந்த உண்மைகளை கூறி இந்த வழக்கை தாக்கல் செய்திருந்தால் வழக்கு கோப்பிற்கே எடுத்துகொண்டிருக்கமாட்டார்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் சுவாதீனம் மற்றும் பத்திரத்தின் அடிப்படையில் அவர்களுக்கு பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

16) பட்டா வழங்கப்பட்ட விவரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் 2017 ல் தெரியும். 2017 க்கு பிறகு இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன் வருவாய் துறையினரிடம் இது தொடர்பாக மனு ஏதேனும் கொடுத்தேனா என்றால் இல்லை. B செட்டியூல் பொதுப்பாதை குறித்து மேற்படி பழைய வழக்கில் ஒரு திருத்தல் மனு தாக்கல் செய்தோம என்றும், அதில் 07.12.2009 ல் முழு விசாரணைக்கு பிறகு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்றால் சரிதான், ஆனால் என்ன உத்தரவு என்று எனக்கு புரியவில்லை.எனக்கு மேற்கண்ட அனைத்து விவரங்களும் தெரியும் என்றும், அதை வழக்கில் மறைத்துவிட்டதால் தெரியவில்லை, நினைவில்லை என்று சொல்கிறேன் என்றால் சரியல்ல. B செட்டியூல் சொத்தில் பொதுமக்களுக்கு என்ன உரிமையுள்ளதோ அதே உரிமை தான் எனக்கும் உள்ளது என்றும், எனக்கு தனிப்பட்ட உரிமை இல்லை என்றால் சரியல்ல.

17) தாவா B செட்டியூல் சொத்தில் வழியாக காமாட்சி அம்மன் கோவிலுக்கு செல்ல இயலும் என்றால் சரியல்ல, கோவிலே அங்கு இல்லை. நான் சொல்வது தவறு என்றும், அந்த வழியாக தான் பொதுமக்கள் சென்று வருகிறார்கள் என்றும், இது குறித்து பழைய உத்தரவிலும் தெரிவிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதிகளின் பத்திரங்கள் அனைத்தும் பதிவு செய்யப்பட்ட பத்திரங்கள் என்றால் சரிதான். அந்த பத்திரங்களின்அடிப்படையில் ஊர் பொதுமக்கள் மற்றும் அனைவருக்கும் வெளிப்படையாக தெரியும் வகையில் அளந்து, அத்துகண்டு பட்டா வழங்கப்பட்டது என்றும், இது யாருக்கும் தெரியாது என்று நான் தவறாக வழக்கில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு இரண்டாவது சுற்று வழக்கு என்பதால் இதை தாக்கல் செய்ய எனக்கு உரிமையில்லை என்றால் சரியல்ல.

18) இந்த வழக்கை தாக்கல் செய்ய உடனடி காரணம் என்ன வழக்கில் சொல்லியுள்ளேன் என்றால் எனக்கு தெரியவில்லை. வழக்கு சொத்தில் எனக்கு எவ்வித உரிமையும் இல்லை என்று முந்தைய வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பிலிருந்து சொல்லிவருகிறார்கள் என்றும், அதனால் தான் முந்தைய வழக்கும் தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல. தபழைய ற்போது வரை தாவா சொத்துக்கள் எனக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்யுமாறு எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் எனக்கு தெரியாததால் செய்யவில்லை.

19) நீதிமன்ற ஆணையர் தனது வரைபடத்தில் கலுங்கு என்று காண்பிக்கப்பட்டுள்ளது எப்போது கட்டப்பட்டது என்றால் 2019 ல் கட்டினோம். கல்கரை, மோட்டார்செட்டை தாண்டி அளந்தபோது அளவு ஆணையர் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு வந்ததா என்றால் பழைய வழக்கில் தாக்கல் செய்த அறிக்கைக்கு அளவுகள் மாறி வந்தது. நீதிமன்ற ஆணையர் அறிக்கையிலும், வரைபடத்திலும் வண்டிப்பாதை குறித்து எதுவும் போடவில்லை என்றால் சரிதான், கலுங்கு மட்டும் தான் காட்டியுள்ளார்கள். நீதிமன்ற ஆணையர் அறிக்கை அனைத்தும்முந்தைய அறிக்கையை முறியடிக்க தாக்கல் செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. இந்தவழக்கில் உண்மைகளை மறைத்து உரிமை இல்லாத சொத்திற்கு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாலும், காலம் கடந்து தாக்கல் செய்துள்ளதாலும், அதிகபட்ச செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

ஓம்/–திரு. M.செல்வம்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.